**FIRST INFORMATION REPORT**

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102084

1. District : மாவட்டம் Thanjavur   PS: காவல்நிலையம் VSAC   Year: ஆண்டு 2018   FIR No.: மு.த.அ. எண் 01/18   Date: நாள் 11-01-2018

2. (i) Act சட்டம்: PC ACT 1988   Sections பிரிவுகள்: 8, 10, 13(1)(d) r/w

   (ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்: 13(2)

   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல் 11-01-18   Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல் 17.45 h   Time to : நேரம் வரை 20.00 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்   Time : நேரம் 21.30 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்   Time : நேரம் 21.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக   written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்   RTO Campus (Dy. Transport Commissioner office).

   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Ramadoss   (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் C. Sekharan

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 14.7.69   (d) Nationality : நாட்டினம் Indian   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Dy. Supdt. of Police   (g) Address : முகவரி Vigilance & Anti-Corruption, Thanjavur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1. S. Singaram @ Sangili S/o. Selvaraja, Plot. No. 90, Natchathra Nagar, Thanjavur.
   2. Tr. S.K.M. Sivakumar, Dy. Transport Commissioner, Thanjavur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. **Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)**
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)**

—

10. **Total value of properties stolen / involved :**
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு** —

11. **Inquest Report / Un-natural death Case No. if any:**
**பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்** —

12. **FIR Contents (Attach separate sheet, if required) :**
**முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)** —

பணிந்து அனுப்பப்பட்டது.

இன்று 11.01.2018ந் தேதி 17.30 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளராகிய நான் அலுவலகத்தில் இருந்தபோது, தஞ்சாவூர் மாவட்ட உதவி ஆணையர் கலால், மாவட்ட ஆய்வு குழு அலுவலர் (பொறுப்பு), திரு.P.இன்னாசிமுத்து அவர்கள் அலுவலகம் வந்து, தஞ்சாவூர் வட்டார போக்குவரத்து அலுவலக வளாகத்தின் மேல் தளத்தில் அமைந்துள்ள துணை போக்குவரத்து ஆணையர் திரு.S.K.M.சிவக்குமார் அவர்களின் மாதாந்திரம் கூட்டம் நடப்பதாகவும், மேற்படி துணை போக்குவரத்து ஆணையரின் மாதாந்திர கூட்டத்தில் கலந்துகொள்ள வந்துள்ள, அவருடைய கட்டுப்பாட்டில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலர்களிடமிருந்து, சுதா டிரைவிங் ஸ்கூல் ஒட்டுனர் பயிற்சி பள்ளி பயிற்சித்து வரும் திரு.சிங்காரம் என்ற சங்கிலி என்பவர் மூலமாக கையூட்டு பெறுவதாக கிடைத்த தகவல் விபரத்தை என்னிடம் சொன்னார். பின்னர் ஆய்வுக்குழு அலுவலர் திடீர் சோதனை ஆய்விற்கு தாங்கள் அலுவலர்களுடன் உதவியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். நானும் அவருடன் பார்டியினருடன் அவருக்கு உதவியாக இருந்தோம். பின்னர் திடீர் சோதனை ஆய்வு முடித்து, 20.00 மணிக்கு திடீர் சோதனை நடவடிக்கையுடன், நடவடிக்கையின் போது மேற்படி துணை போக்குவரத்து அணையர் திரு.S.K.M.சிவக்குமாருக்கு கொடுப்பதற்காக, சிங்காரம் (எ) சங்கிலி பெற்றுவைத்திருந்த, ரூ.2,77,000/- ஐயும் ஆஜர் செய்தார். அந்த திடீர் சோதனை நடவடிக்கையின் விபரம் பின்வருமாறு.

13. **Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS………………………………………on point of jurisdiction.**

**எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.**

**FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.**
**மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.**

(signature) 11.01.18

14. **Signature / Thumb Impression of the Complainant / Informant**
**குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /**
**பெருவிரல் இரேகைப் பதிவு**

**Signature of the Officer in-charge, Police Station**
**காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்**

15. **Date & Time of despatch to the court:**
**நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்**

**Name: பெயர்** S. Ramadoss
**Rank: நிலை** DSP, V&AC, Tanjavur **No. எண்** ………

தஞ்சாவூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் மேல் தளத்தில் அமைந்துள்ள துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் துணைப் போக்குவரத்து ஆணையர் மாதாந்திர கூட்டம் நடப்பதாகவும் அவருக்கு கீழ் பணிப்புரியும், அலுவலர்களிடம் சுதா ஓட்டுநர் பயிற்சி பள்ளியை சேர்ந்த திரு.செ.சிங்காரம் @ சங்கிலி, என்பவர் மூலம் கையூட்டு பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில், தஞ்சாவூர் மாவட்ட (பொறுப்பு) ஆய்வு குழு அலுவலர் திரு.P. இன்னாசிமுத்து, ஆகிய நான் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் மேற்படி தஞ்சாவூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் **11.01.2018** அன்று 17.45 மணியளவில் திடீர் சோதனை மேற்கொண்ட போது தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கை விபரம்.

இந்த திடீர் சோதனை குழுவின் விபரம்:-

1. திரு.P .இன்னாசிமுத்து, தஞ்சாவூர் ஆய்வுகுழு அலுவலர்(பொ), உதவி ஆணையர் கலால் தஞ்சாவூர்.
2. திரு.S.ராமதாஸ், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.
3. திருமதி.இரா.தமிழ்செல்வி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.
4. திருமதி.P.பத்மாவதி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.

இந்த திடீர் சோதனையின் போது தஞ்சாவூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஆஜரில் இருந்த அலுவலர்கள் விபரம்:-

1. திரு.க.தனபால், நேர்முக உதவியாளர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தஞ்சாவூர்.
2. திருமதி.ரெ.மீனாம்பாளர், கண்காணிப்பாளர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தஞ்சாவூர்.
3. திருமதி.தி.சண்முகப்ரியா, கணக்கர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தஞ்சாவூர்.
4. திருமதி.கு.ஞானசுந்தரி, உதவியாளர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தஞ்சாவூர்.
5. திரு.சாண்டில்யன், உதவியாளர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தஞ்சாவூர்.
6. திரு.ஏ.தனசேகர், உதவியாளர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தஞ்சாவூர்.
7. திருமதி.இரா,லாவண்யா, இளநிலை உதவியாளர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தஞ்சாவூர்.

8. திருமதி.மா.வசந்தபிரியா, இளநிலை உதவியாளர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தஞ்சாவூர்.
9. திரு.மா.வாசு, தட்டச்சர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தஞ்சாவூர்.
10. ஆ.காலித் பாஷா, எல்காட் பணியாளர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தஞ்சாவூர்.

திடீர் சோதனை மேற்கொள்வதற்கு மேற்படி தஞ்சாவூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் நுழைந்து வாகனத்தை நிறுத்தியபோது கூட்டம் முடிந்து அலுவலர்கள் வாகனத்தில் வெளியேறிகொண்டிருந்தனர். அலுவலகத்தில் ஆஜரில் இருந்த திரு.க.தனபால், நேர்முக உதவியாளர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தஞ்சாவூர் அவர்களிடம் விசாரித்த போது கூட்டம் முடிந்து விட்டதாகவும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர், துணைப் போக்குவரத்து ஆணையர் மற்றும் கூட்டத்திற்கு வந்த அலுவலர்கள் சென்று விட்டதாக தகவல் கூறினார். அப்போது வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் வாசலில் இருந்து ஒரு நபர் கையில் பையுடன் ஓடினார். அவரை மேற்படி அலுவலத்தின் எதிர்புறம் இருந்த சுதா ஓட்டுநர் பயிற்சிபள்ளி வாசல் அருகே அவரை பிடித்து விசாரித்த போது அவரது பெயர் சங்கிலி என்கிற சிங்காரம் என்றும் அவாது தந்தை பெயர் செல்வராஜீ, எண்.90. நட்சத்திர நகர், 3வது தெரு, தஞ்சாவூர் என்கிற முகவரில் வசிப்பதாகவும், சுதா ஓட்டுநர் பயிற்சிபள்ளி ஒனர் திரு.ஆர்.விஜயகுமார் என்பவர் தனது அக்காவின் கணவர் என்றும் கடந்த 10 வருடமாக மேற்படி சுதா ஓட்டுநர் பயிற்சிபள்ளியை தான் நிர்வாகித்து வருவதாகவும் அதனால் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் அலுவலர்களுடன் அதிகமான பழக்கம் உண்டு என்றும் தெரிவித்தார். மேலும் இன்று துணை போக்குவரத்து ஆணையர் அவர்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் முதல் தளத்தில் அமைந்துள்ள அவாது அலுவலக அறையில் மாதாந்திர கூட்டம் நடத்தியதாகவும் அந்த கூட்டத்திற்கு தஞ்சாவூர் சரகத்தில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களான வட்டாரப் போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் கலந்து கொண்டதாகவும், ஒவ்வொரு மாதாந்திர கூட்டத்தின் போது மேற்படி அலுவலர்கள் தன் மூலமாகவே துணைப் போக்குவரத்து ஆணையருக்கு கையூட்டு கொடுப்பது வழக்கம் என்றும் அதுபோல இன்றும் தான் தன்னுடைய ஓட்டுநர் பயிற்சிபள்ளியில் இருந்த போது அறந்தாங்கி மோட்டார் வாகன ஆய்வாளர், தன் ஓட்டுநர் மூலம் பணமுள்ள 2 வெள்ளை கவர்களும் அந்த கவரில் அறந்தாங்கி 30,000, அறந்தாங்கி MPOL 42,000 என பென்சிலால் எழுதப்பட்டிருந்த கவர்களையும், புதுக்கோட்டை வட்டாரப் போக்குவரத்து அலுவலர் தனது ஓட்டுநர் மூலம் புதுக்கோட்டை என எழுதப்பட்ட பணம் உள்ள ஒரு பிரவுன் கலர் கவரும், கும்பகோணம் வட்டாரப் போக்குவாத்து அலுவலர் தன் ஓட்டுநர் மூலம் ஒரு வெள்ளை கவரில் KMU என

எழுதப்பட்டிருந்த பணமுள்ள கவரையும், மற்றொரு பிரவுன் கவரில் DTC, RTO/KUM , கும்பகோணம் DTC என எழுதப்பட்டிருந்த பணமுள்ள கவரையும், சீர்காழி மோட்டார் வாகன ஆய்வாளர் தன் ஓட்டுநர் மூலம் DTC/TANJORE Rs.20,000/-, K.KANJI, MVI/GR-1, O/o Unit Sirkali. என எழுதப்பட்டிருந்த பணமுள்ள பிரவுண் கலர் கவரையும், நாகப்பட்டிணம் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் NGT என பென்சிலில் எழுதப்பட்ட பணமுள்ள ஒரு வெள்ளை கவரையும் அந்தந்த அலுவலக ஓட்டுநர் மூலம் தன்னிடம் ஒப்படைத்ததாகவும், அந்த கவர்களில் பணத்தை உள்ளே வைத்து ஒவ்வொரு கவரிலும் ஸ்டாப்லர் போடப்பட்டிருந்ததாகவும், அதை தான் வாங்கி ஒரு துணிப்பையில் வைத்திருந்ததாகவும், கூட்டம் முடிந்து விட்டதாக கேள்விப்பட்டு பணத்தை துணைப் போக்குவரத்து ஆணையர் திரு.S.K.M. சிவகுமார் அவர்களிடம் ஒப்படைப்பதற்காக வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு வந்தேன். அப்போது துணைப் போக்குவரத்து ஆணையரும் அவாது வாகனத்தில் கிளம்பி விட்டார். எதுவும் சொல்லாமல் போகிறாரே என்று அலுவலகத்திற்குள் சென்று விசாரிக்கலாம் என்று நினைத்து அலுவலகத்திற்குள் வந்தேன். அப்போது தான் லஞ்ச ஒழிப்பு துறையினர் வந்த விபரம் தெரிந்தது. அதனால் கையில் வைத்திருந்த பையுடன் தனது ஓட்டுநர் பயிற்சி பள்ளியை நோக்கி ஓடிய போது ஆய்வுகுழு அலுவலரிடம் பிடிப்பட்டதாகவும் தெரிவித்தார். அவரை மேற்படி தஞ்சாவூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குள் கொண்டு வந்து விசாரித்த போது மேற்படி சங்கிலி தன் கையில் வைத்திருந்த பையையும் ஆஜர் படுத்தினார். அந்த ரோஸ் கலர் பையின் மேற்புறத்தில் திருமண வரவேற்பு தாம்பூலம் என்று எழுதப்பட்டிருந்தது. அந்த பையின்னுள்ளே இருந்த கவர்களின் ஸ்டாப்லர் நீக்கப்பட்டு பார்த்த போது அதனுள் கீழ் கண்ட விபரப்படி தொகை இருந்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அறந்தாங்கி 30,000 | 2000 x 13<br>500 x 8 | 26,000<br>4,000 | 30,000 |
| 2 | அறந்தாங்கி MPOL 42,000 | 2000 x 21 | 42,000 | 42,000 |
| 3 | புதுக்கோட்டை | 2000 x 27<br>500 x 42 | 54,000<br>21,000 | 75,000 |
| 4 | KMU | 2000 x 25 | 50,000 | 50,000 |
| 5 | கும்பகோணம் | 2000 x 11<br>500 x 56 | 22,000<br>28,000 | 50,000 |
| 6 | Sirkali(K.Kanji) | 500 x 40 | 20,000 | 20,000 |
| 7 | NGT | 2000 x 3<br>500 x 8 | 6000<br>4000 | 10,000 |
| | | | Total | 2,77,000 |

மேற்படி பணம் ரூ.2,77,000/- மற்றும் அவை இருந்த கவர்களும் பையுடன் கையூட்டு பணம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்பொருட்டு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனை நடவடிக்கை 11.01.2018 தேதி 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் கொடுத்த திடீர் சோதனை நடவடிக்கையின் தொடர்ச்சியாக, ஆஜர் செய்த பணத்தையும், தஸ்தாவேஜ்சுகளையும் 20.15 மணி முதல் 21.00 மணி வரை மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜரின் விபரம் பின்வருமாறு:

11.01.2018 தேதி 17.45 முதல் 20.00 மணி வரை தஞ்சாவூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் மேல் தளத்தில் அமைந்துள்ள துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் மேற்கொண்ட திடீர் சோதனை தொடர்பாக தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கை மூலம் தஞ்சாவூர் ஆய்வுகுழு அலுவலர் திரு.பா.இன்னாசிமுத்து அவர்களால் திடீர் சோதனையின் போது கண்டறியப்பட்ட கையூட்டு பணத்தை கீழ் கண்டவாறு கைப்பற்றப்பட்டது தொடர்பாக 11.01.2018 ஆம் தேதி 20.15 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.S.ராமதாஸ் அவர்களால் தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசர் விபரம்.

தஞ்சாவூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் மேல் தளத்தில் அமைந்துள்ள துணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்ட போது தஞ்சாவூர் ஆய்வுகுழு அலுவலர் திடீர் சோதனையின் போது திரு.சங்கிலி என்கிற சிங்காரம் த/பெ. செல்வராஜீ, 90.நட்சத்திர நகர், 3வது தெரு, தஞ்சாவூர் என்பவரிடம் இருந்து கண்டறியப்பட்ட கீழ்கண்ட தடயங்களை இந்த மகசர் மூலம் கைப்பற்றப்பட்டது.

1. கைப்பற்றப்பட்ட கையூட்டு தொகையின் விபரம்:-

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அறந்தாங்கி 30,000, | 2000 x 13<br>500 x 8 | 26.000<br>4.000 | 30,000 |
| 2 | அறந்தாங்கி MPOL 42,000 | 2000 x 21 | 42.000 | 42.000 |
| 3 | புதுக்கோட்டை | 2000 x 27<br>500 x 42 | 54.000<br>21.000 | 75.000 |
| 4 | KMU | 2000 x 25 | 50,000 | 50,000 |
| 5 | கும்பகோணம் | 2000 x 11<br>500 x 56 | 22,000<br>28,000 | 50,000 |
| 6 | Sirkali(K.Kanji) | 500 x 40 | 20,000 | 20,000 |
| 7 | NGT | 2000 x 3<br>500 x 8 | 6000<br>4000 | 10,000 |
| | | | Total | 2.77.000 |

2. கையூட்டு பணம் இருந்த கவர்கள்

    1. அறந்தாங்கி 30,000, என எழுதப்பட்ட ஒரு வெள்ளை நிற கவர்
    2. அறந்தாங்கி MPDL 42,000 என பென்சிலால் எழுதப்பட்ட ஒரு வெள்ளை நிற கவர்

3. புதுக்கோட்டை என எழுதப்பட்ட ஒரு பிரவுன் கலர் கவர்,
4. KMU என எழுதப்பட்டிருந்த வெள்ளைநிற கவர்,
5. DTC, RTO/KUM , கும்பகோணம் DTC என எழுதப்பட்டிருந்த பிரவுன் கவர்,
6. DTC/TANJORE Rs.20,000/-, K.KANJI, MVI/GR-1, O/o Unit Sirkali. என எழுதப்பட்டிருந்த பிரவுண் கவர்,
7. NGT என பென்சிலில் எழுதப்பட்ட ஒரு வெள்ளைநிற கவர்.

3. கையூட்டு பணம் இருந்த பை

ரோஸ்நிற கைப்பிடியுள்ள துணிப்பை ஒன்று அதன் ஒருபுறம் ஸ்ரீசீனிவாசா சிண்டிகேட் & ரெடிமேட்ஸ் 235,236, M.G. ரோடு விழுப்புரம், மற்றொரு பக்கம் ஸ்ரீ ஹரி: திருமண வரவேற்பு தாம்பூலம் மணமக்கள் விபரம் எழுதப்பட்டிருந்தது.

மேற்கண்ட தடயங்கள் அனைத்தும் இந்த கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றப்பட்டது. இந்த மகசர் 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

பின்னர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் பார்ட்டியினருடன் கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணங்களுடன் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 21.30 மணிக்கு வந்து, துணை போக்குவரத்து ஆணையர் அவர்களின் மாதாந்திர கூட்டத்திற்கு கலந்துக் கொள்ள வந்திருந்த துணை போக்குவரத்து ஆணையர் கட்டுப்பாட்டில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலக அதிகாரிகளிடமிருந்து துணை போக்குவரத்து ஆணையருக்காக லஞ்ச பணத்தை பெற்று வைத்திருந்த சிங்காரம் என்கிற சங்கிலி என்பவர் மீதும், துணை போக்குவரத்து ஆணையர் திரு.S.K.M.சிவக்குமார் மீதும் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.1/2018, சட்டப் பிரிவு 8, 10 மற்றும் 13(1)(d) r/w 13(2) ஊழல் தடுப்பு சட்டம் 1988 -ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

முதல் தகவல் அறிக்கையின் அசலையும் மற்றும் திடீர் சோதனை நடவடிக்கை மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றை கும்பகோணம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் தனி நீதிபதி அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்றை நிலைய கோப்பிவில் வைக்கப்பட்டது.

11.01.18

Deputy Supdt. of Police,
Vigilance and Anti Corruption,
THANJAVUR.